சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டியூரில் முன்னாள் கழக அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசுவின் 34வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தானிப்பட்டியில் உள்ள அவரது நினைவிடத்தில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் தென்னரசு மகள் இளவரசி, மருமகன் நமகோடி நாராயணன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., திண்டுக்கல் லியோனி, திருமதி அமுதா லியோனி, மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.அருணாச்சலம், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, நெய்வேலி நகரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுனர் டி.பன்னீர் அவர்களின் குடும்பத்திற்கு, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் ரூபாய் 25 ஆயிரம் கல்வி உதவித் தொகை காசோலையாக வழங்கப்பட்டது. இதனை அமைச்சர் சி.வி.கணேசன், பயனாளி பன்னீரிடம் என்.எல்.சி. தொ.மு.ச. அலுவலகத்தில் வழங்கினார். இந்நிகழ்வில் சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ., பொருளாளர் ஜி.தண்டபாணி, இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.ராஜேஷ், ஒன்றியச் செயலாளர்கள் வேல்முருகன், குணசேகரன், சந்தோஷ், நகர செயலாளர்கள் குருநாதன், மணிவண்ணன், ஒன்றிய துணைச் செயலாளர் சுமதி நந்தகோபால், பேரூர் செயலாளர் ஜெயமூர்த்தி, விவசாய அணி கோனூர் மதியழகன், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஸ்டாலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

அன்புச் சகோதரர் செல்வப் பெருந்தகைக்கு

இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஏப். 16 -

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் கு.செல்வப் பெருந்தகையின் பிறந்த நாளையொட்டி, அவருக்கு வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

மதச்சார்பின்மைக் கொள்கையில் இருந்து வழுவாமல் நின்று இந்திய நாட்டின் அடிப்படைக் கருத்தியலைக் காக்கப் போராடும் காங்கிரஸ் பேரியக்கத்தின் மாநிலத் தலைவர், என்றும் வெற்றிக்காக நம்மோடு இணைந்து பாடுபடும் அன்புச் சகோதரர் செல்வப் பெருந்தகை அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் – திருக்கோட்டியூரில்

எஸ். எஸ்.தென்னரசுவின் 34வது ஆண்டு நினைவு தினம்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் அமைதிப் பேரணி! மு.தென்னவன் - தமிழரசி எம்.எல்.ஏ. - காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. - திண்டுக்கல் லியோனி பங்கேற்பு!

சிவகங்கை, ஏப்.16-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா திருக்கோட்டியூரைச் சேர்ந்தவர் எஸ். எஸ். தென்னரசு. கழக முன்னோடியான இவர் திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், முன்னாள் கழக அமைப்புச் செயலாளராகவும் பணியாற்றியவர். தலைவர் கலைஞர் அவர்களால் சேது நாட்டு செல்லக்கிளி என்று அழைக்கப்பட்டவர். இத்தகைய கழக முன்னோடியான எஸ். எஸ்.தென்னரசு கடந்த 13.4.1991ம் ஆண்டு மறைவெய்தினார். அவரது நினைவினைப் போற்றிடும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் 13ஆம் தேதி திருக்கோட்டியூர் தானிப்பட்டியில் உள்ள அவரது நினைவிடத்தில் சிவகங்கை மாவட்ட தி.மு.க. மற்றும் தென்னரசு குடும்பத்தின் சார்பில் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. அன்னாரின் 34வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருக்கோட்டியூரில் உள்ள அவரது இல்லத்தில் எஸ். எஸ்.தென்னரசின் திருவுருவப்படத்திற்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., தென்னரசின் மகள் இளவரசி மருமகன் நமகோடி நாராயணன், அவரது சகோதரர் எஸ்.எஸ். அருணாசலம் மகன் எஸ். எஸ்.ஏ. வல்லபாய் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ மற்றும் உறவினர்கள் தி.மு.க. வினர் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்கள். அதனை தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது. சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்ற அமைதி பேரணி தானிப்பட்டியில் உள்ள தென்னரசின் நினைவு இடத்திற்கு வந்து சேர்ந்தது.

எஸ். எஸ். தென்னரசு நினைவிடத்தில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் முதலாவதாக மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

அவரை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், காதர்பாட்சா முத்துராமலிங்கம், திண்டுக்கல் ஐ.லியோனி அவரது துணைவியார் அமுதாலியோனி, தென்னரசு மகள் இளவரசி, மருமகன் நமகோடி நாராயணன், அவர் சகோதரர் எஸ். எஸ். அருணாச்சலம், மகன் மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த. சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி காரைக்குடி மாநகர மேயர் எஸ். முத்துத்துரை, துணை மேயர் நா.குணசேகரன், நகர் கழக செயலாளர்கள் பெரி. பாலா, க. பொன்னுச்சாமி, நா.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, ஏ.ஆர். ஜெயமூர்த்தி, எம். சோமசுந்தரம், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். சண்முக வடிவேல் ,விராமதி மாணிக்கம், பூமணி, கே. பாலசுப்பிரமணியன், சுப. சின்னத்துரை, கே.எஸ். ஆனந்த், குன்னக்குடி சுப்பிரமணியன், எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், துரை.ராஜாமணி, எம்.அண்ணாதுரை, ஆறு. செல்வராஜன், வே .தமிழ் மாறன், கா.வெங்கட்ராமன், நாகணி ரவி, பூபால சிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன்,

பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர்.கார்த்திகேயன், தி.கதிர்வேல் கே.பி.எஸ்.பழனியப்பன், பகுருதீன் அலி முகமது, மாவட்ட மகளிர் அணி தலைவர் திருமதி மணிமேகலை முத்துச்சாமி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமலதா செந்தில், மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் திருமதி தமிழ் பிரியா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்க முத்து, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சுப. சண்முகநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், பேருராட்சி தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், இலக்கிய அணி அழகையா, மாவட்ட தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, தென்னரசு சகோதரி இந்திரா, ஒன்றிய நகர பேருர் கழக நிர்வாகிகள் கார்த்தி, மாணிக்கம், பாண்டி, செந்தாமரை, வசந்த், முரளி, மலர்,

மகளிர் அணி கனகா, முத்து செல்வம், நாகராஜ், தங்கவேலு, முத்துவேல், சொக்கு, ரமேஷ், கணேசன், முத்தழகு, சங்கரன், மொர்குரி தனபால், முரளி, பழனியப்பன், கிருஷ்ணமூர்த்தி, காசி விஸ்வநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வராஜ், இளைஞரணி அயூப்கான், விவசாய அணி காளிமுத்து, தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், அயலகனி சன் சீமான் சுப்பையா, பிள்ளையார்பட்டி ராஜேஷ், ஓய்கா சோமசுந்தரம், சிவபுரி சேகர், அலாவுதீன் யாகூப், தலைமைக் கழக பேச்சாளர் ராமகிருஷ்ணன், அவைத் தலைவர் திருநாவுக்கரசு, ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன், மாநகர பிரதிநிதி ஓட்டுனர் ரமேஷ், புதூர்கண்ணன், தொ.மு.ச. முருகேசன், ஏ.எல்.சந்திரன், மாநகராட்சி உறுப்பினர் சொ.கண்ணன், மீனவரணி அண்ணாமலை, விவசாய அணி சேகர், ஈஸ்வரன்,

மாவட்ட விவசாய அணி இணை அமைப்பாளர் முருகன், ரவி, பன்னீர்செல்வம், ஜெயகுமார், பொருளாளர் அன்புசெல்வன், அழகு சுந்தரம், உதயம் சண்முகம், பாண்டி, கோதண்டபாணி உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து ஒன்றிய நகர, பேருர் கழக நிர்வாகிகள் சார்புஅணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

நினைவு தின நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயலாளரும் அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் எஸ்.எஸ். தென்னரசு குடும்பத்தினர் செய்திருந்தார்கள். நினைவிடத்தில் அனைவருக்கும் காலை அறுசுவை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி, வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி கழக நிர்வாகிகளுடன் "சமத்துவ நாள் உறுதிமொழி" எடுக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஜெ.ஹெலன் டேவிட்சன், என்.தில்லைசெல்வம், வி.ஜோசப் ராஜ், எப்.எம்.இராஜரெத்தினம், ஐ.கேட்சன், வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம் – காட்டுமன்னார் கோவில் வட்டம் – வெள்ளியங்கால் ஓடையில் நீரில் மூழ்கி

உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப். 16 -

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், வெள்ளியங்கால் ஓடையில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்ததுடன் நிதியுதவி வழங்கியும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், வடக்கு கொளக்குடி கிராமம், ஜாகிர் உசேன் நகரைச் சேர்ந்த செல்வன்.ஷேக் அப்துல் ரஹ்மான் (வயது 13) த/பெ.சாதிக் பாஷா, செல்வன்.முகமது ஹபில் (வயது 10) த/பெ.ஜாஃபர் சாதிக் மற்றும் செல்வன்.உபையதுல்லா (வயது 9) த/பெ.முஜிபுல்லா ஆகிய மூன்று சிறுவர்கள் நேற்று (14.4.2025) மாலை 4.00 மணியளவில் கொல்லிமலை கீழ் பாதி கிராம எல்லையில் உள்ள வெள்ளியங்கால் ஓடையில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக மேற்படி மூன்று சிறுவர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

சிதம்பரம் லால்புரத்தில் கவரிங் நகை தொழிற்பேட்டை!

முதல்வருக்கு தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்கம் நன்றி!

சங்கத் தலைவர் ஜி.சேகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

சிதம்பரம், ஏப். 16-

சிதம்பரம் லால் புரத்தில் கவரிங் நகை தொழிற் பேட்டை அமைத்து கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கூட்டம் நடைபெற்றது.

தமிழ் நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்கம் சிதம்பரம் கவரிங் நகை வியாபாரிகள் சங்கம் மற்றும் கவரிங் நகை உற்பத்தியாளர்கள் சார்பாக சிதம்பரத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு தமிழ் நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்க மாநில தலைவர் ஜி.சேகர் தலைமை தாங்கினார். தொழிற்சங்க செயலாளர் ஆர்.இராமச்சந்திரன் கவரிங் நகை வியாபாரிகள் சங்க தலைவர் ஆர். முத்துக் குமரன் எம். சாம்ராஜ் ஜே. ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் பி.முத்துக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

சட்ட மன்ற தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் தமிழ் நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்க கோரிக்கையை ஏற்று 214 வது வாக்குறுதியான உலகப்புகழ் பெற்ற சிதம்பரம் கவரிங் நகை சிறப்பு தொழிற்பேட்டை சிதம்பரம் லால்புரத்தில் 5 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 1.24 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும் என குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் தொழில் நிறுவனங்கள் மானிய கோரிக்கையில் அறிவிக்க செய்த தமிழ் நாடு முதலமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பரிந்துரை செய்த வேளாண் மற்றும் உழவர் நலன் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கும் அறிவிப்பை வெளியிட்ட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தமிழ்நாடு முதல்வர் அவர்களையும் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களையும் நேரில் சந்தித்து நன்றி தெரிவிப்பது கவரிங் நகைகளுக்கு வரிவிலக்கு அளிக்க அரசை வேண்டுவது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

நிகழ்ச்சியில் துணை செயலாளர்கள் எம்.பாலசுப்பிரமணியன், எம்.சுரேஷ், கவரிங் நகை உற்பத்தியாளர்கள் எம்.எஸ்.ஆர்.ரவி, டி.தண்டபாணி, என்.கே. எஸ்.ராஜேஷ், அ.வெங்கடேசன், ஏ.ஜி.வெங்கடேஷ், ஏ.பி.எஸ்.சதீஷ், எஸ்.சிவராமன், வி.சக்திவேல், எஸ். ஞானசேகர், ஆர்.நடராஜன், கே.தியாகராஜன், ஏ. உமர் பாரூக், ஆர்.தில்லை நடராஜன், ஆர்.மாரியப்பன், பி.சிவகுமார், என். மாரியப்பன், ஆர்.கனகசபை, கே.பாலாஜி, ஆர். கிருஷ்ணகுமார், ஜி.சிவகுமார், ஆர்.சேகர், ஆர். சிதம்பரநாதன், ஆர்.சோமசுந்தரம், எஸ்.செந்தில்நாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவில் மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ். ரமேஷ் நன்றி கூறினார்.

மன்னார்குடி தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தொடங்கிவைத்தார்!

திருவாரூர், ஏப்16-

திராவிட நாயகர் தமிழ் நாடு அரசின் முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல்களோடு திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தூர்வாரும் பணி மற்றும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் மற்றும் கழகநிர்வாகிகள் உடனிருந்தனர்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், காஞ்சிக்குடிகாடு, மேல நாகை, கீழநாகை, சுந்தரக் கோட்டை மற்றும் இடையர்நத்தம் கிராமம் வடவாறு கிளை எண்: 01 வாயக்கால் நெடுகை 0.00 கி.மீ முதல் 11.50 கி.மீ வரை ரூ.13.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் தூர்வாரும் பணியை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி. ராஜா தொடங்கி வைத்தார். பேரையூர், அப்பரசம் பேட்டை, காஞ்சிகுடிக்காடு, மேலநாகை, கீழநாகை, சுந்தரக்கோட்டை, இடையர் நத்தம் மற்றும் கீழநத்தம் ஆகிய கிராமங்கள் பயனடையும். 2895 ஏக்கர் பயனடையும் பாசன பகுதியாகும்.

அதனைத்தொடர்ந்து, மன்னார்குடி வட்டம், மேலவாசல் ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடையினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்கள்.

மேலும் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், ஆய்குடி ஊராட்சியில் நபார்டு வங்கியின் மூலம் ரூ.237.45 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளாற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட புதிய பாலத்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச்சந்திரன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சி முன்னாள்தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, அவைத்தலைவர் க. தன்ராஜ், சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் பி.ராஜ மாணிக்கம், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் சோம. செந்தமிழ்ச் செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், நகர செயலாளர் வீரா கணேசன், நகர்மன்ற உறுப்பினர் ராஜபூபாலன், மாவட்ட மகளிரணி தலைவர் ராணி.சேகர், மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர் பகலவன் பி..ஆர். ராஜாராம், பைங்காநாடு இளையராஜா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தமிழ் நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்கம் சார்பாக சிதம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சிதம்பரம் லால் புரத்தில் கவரிங் நகை தொழிற்பேட்டை அமைத்து கொடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து சங்க மாநிலத் தலைவர் ஜி.சேகர் பேசினார். உடன் நிர்வாகிகள் உள்ளனர்.